நிஹால் ஸ்ரீ அமரசேகர, அரச மற்றும் தனியார் துறையினரால் நன்கு அறியப்பட்ட ஒரு பல்துறை சார் தொழிற்சார் நிபுணர், அவர் பரந்த சர்வதேச வெளிப்பாட்டு அனுபவத்துடன் கூடிய இலங்கையின் பொதுநல ஆர்வலராக காணப்படுகின்றார். அவர் நீதித்துறையினை சார்ந்தவராக இல்லாத போதும், இலங்கையின் உயர் நீதித்துறை அமைப்பான உச்ச நீதிமன்றத்தின் முன் தனிப்பட்ட முறையில் பிரசன்னமாகி, மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக பொறுப்பு ஆகிய விரிவாக்கலுடன், வெற்றிகரமாக பொதுநல வழக்குகளை வாதாடியுள்ளார். அவர் ஒரு தடயவியல் - கணக்கியல், புலனாய்வு வல்லுநர் ஆவார். அவர் பரந்தளவில் கூர்மையான வெளிப்பாடுகளை வெளியிட்டுள்ளதுடன், அமைதியான முறையில்,தேசிய மற்றும் பொதுநல அக்கறையுடன்கூடிய விடயங்களை வெளிப்படுத்தியுள்ளார். புனித கட்டளையான பொது சொத்துக்களும் நிதியும் முற்றிலும் பொதுமக்களுக்கு உரித்தானதும், ஆட்சிபுரிவோரால் நம்பிக்கைக்கு பாத்திரமான முறையில் முகாமை செய்யப்படவும் வேண்டும் என்பதனை ஊக்கமாக ஆதரித்து கடைப்பிடிப்பவராவார் ; இக்கட்டளை மீறப்படுகின்ற இடங்களில் அர்ப்பணிப்புடன் போராடி, அச்சமின்றி அதிகாரம் நிறைந்த அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் வர்த்தகர் முன்பாக எதிர்த்துநின்றார் ;சமூகத்திற்கான அடிப்படை பொறுப்பினை மீறி, சமரசம் செய்தும், மறைமுகமாக மோசடியினை ஆதரித்து பணிபுரிந்த தொழில்வல்லுநர்களை கண்டித்ததுடன், அவ்வாறு இல்லாதவருக்கு அறிவுரைகளையும் அளித்தார்.